1982 மார்ச் 17]

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அரசு நூற்பாலை அமைக்கப்படும்?

மாண்பு மிகுதிரு. எஸ். திருநாவுக்கரசு: (அ)மற்றும்(ஆ) கீழ் வைப்பார் கிராமத்தில் உள்ள சில நபர்களிடம் இருந்து அரசுக்கு வந்துள்ள மனுவில் கிராம சமுதாயப் பொதுக்காடான 193 ஏக்கர் 83 சென்ட் நிலத்தை அரசு ஏற்று நூற்பாலை அமைத்துத் தரும்படி வேண்டியுள்ளனர்.

கூட்டுறவு நூற்பாலைகளே இல்லாத மாவட்டங்களில் மட்டுமே கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. நெல்லை மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மேலும் எட்டையபுரத்தில் பாரதியார் பெயரால் இன்னும் ஒரு நூற்பாலை அமைய இருக்கின்றது. ஆகவே கீழ் வைப்பார் கிராமத்தில் மேலும் அதிகப்படியாக ஒரு நூற்பாலை அமைப்பதற்கு வழியில்லை.

திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் விளாத்திக்குளம் தாலுகாவை தமிழக அரசின் புரட்சித் தலைவர் அவர்கள் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவித்து, ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது. அந்தப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாத காரணத்தால், அரசு இதற்கு வேறு ஏதாவது மாற்றுருழி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை அங்கே இல்லை.

திரு ரா. கு. பெருமாள்; தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை இல்லாவிட்டாலும்கூட, ஒரு ஆயிரம் பேர்களுக்கு வேலை தருகின்ற வகையிலே சிப்காட் மூலம் ஒரு இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்சை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ் திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே] மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

Geological Survey of Firest Lands and Hill tracts

*Q. No. 530 THIRU P. VENKATASUBRAMANIAN; Wll the Hon. theMinister fo Industries be pleased to state

Whether the Government hav conducted any Geologcial survey of the forest lands and hilly tracts in the State

மாண்புமிகு திரு எஸ். திருநாவுக்கரசு: ஆம் இந்திய புவியியல் ஆய்வுக் கழகம் தமிழ்நாட்டின் வன மற்றும் மலைப் பகுதிகளிலும் பொதுவான புவியியல் வரைப்பட ஆய்வுகளை மேற்கொண்டது. இத்துடன் தமிழ்நாடு மாநில புவியியல் பிரிவும் மாநிலத்தின் வன மற்றும் மலைப்பகுதிகளிலும் கனிம வளங்களை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வுகளை செய்தது.

[1982 மார்ச் 17

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வின் மூலம் ஏதாவது கனிமப் பொருள்கள் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா? அந்தக் கனிமப் பொருள்களை வைத்துக்கொண்டு, தமிழகத்தில் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் உள்ள எல்லா கனிம வளங்களைப் பற்றியும் சொல்வதானால், அது பெரிய பதிலாக அமையும். இருந்தாலும்கூட, இந்த ஆய்வின் அடிப்படையிலே பாக்சைட், தங்கம், இரும்புத் தாது, செம்பு, மாக்னசைட், சுரும்பாறை, கற்கள், சிலிக்கான், வெண் களிமண் போன்ற பலவகையான கனிமங்கள் தமிழகத்தின் காட்டுப் பகுதிகளிலே பல்வேறு இடங்களில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே வியாபார ரீதியாக, எந்தெந்தப் பகுதிகளில் பொருளாதார ரீதியாக வர்த்தக ரீதியாக இலாபகரமாக இருக்கும் என்பதைப் பரிசீலித்து அதற்குப் பின்னால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கனிமப் பொருள்களைக் கொண்டு, பாக்டரி ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னேன். கொடுக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் வியாபார ரீதியாக, லாபகரமாக எந்தெந்த பகுதிகளிலே கிடைக்கின்ற கனிமப் பொருள்களைப் பயன்படுத்த முடியுமோ அவற்றையெல்லாம் மீண்டும் ஆலோசித்த பின்னர் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே பெருமளவிற்கு கனிமப் பொருள்கள் ..ருப்பதாக அமைச்சர் அவர்கள் அளித்த பதிலிலே சொன்னார்கள். ஆனால், பிற மாநிலங்களோடு ஒப்பிடுகின்றபோது நம்முடைய தமிழகத்தில் அந்தக் கனிமப் பொருள்களை அதிகமாக எடுக்கவில்லை. வியாபார ரீதியாக அமைக்கப்படவில்லை. ஆகவே, இந்த புவியியற் ஆராய்ச்சியை இன்னும் விரிவுபடுத்தி, இப்படிப்பட்ட கனிமப் பொருள்களை எடுத்து, தொழிற்சாலைகள் ஏற்படுத்த அரசு அதிக அக்கறை செலுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய தீவிர நடவடிக்கைகளின் பலனாகத் தான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இந்த அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. அவற்றைப் பயன்படுத்துவதற்கு, இந்த ஆய்விலே எந்தெந்தப் பகுதிகளில் இருக்கின்றது, என்று பரவலாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தொழிற்சாலை அமைக்க, அதிலே எவ்வளவு கன்டென்ட்ஸ் இருக்கிறது மொத்தம் எவ்வளவு அளவுக்கு கீழே பதிந்து கிடக்கின்றது

1982 மார்ச் 17]

ஆகிய இவற்றையெல்லாம் கண்டு வியாபார ரீதியாக, வர்த்தக ரீதியாக ஏற்படுத்துவது என்பதையெல்லாம் தீவிரமாக கவனத்தில் கொண்டு அதற்குப் பின்னால் இதற்கான தொழிற்சாலை அமைக்கப்படும். எனவே, இவற்றையெல்லாம் ஆய்வு செய்ததற்குப் பின்னர் தான், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோவைத்தம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புவியியல் ஆய்வை மாநில சர்க்கார் நடத்துகிறதா? அல்லது மத்திய சர்க்கார் நடத்துகிறதா? இதற்காக மத்திய சர்க்கார் உதவி செய்கிறதா? இந்த பூமிக்கு அடியில் ஆய்வை நடத்துகின்றவர்கள், நிலத்தடியில் காவேரிப் படுகையில் மண் எண்ணெய் பெட்ரோல் ஆகியவை இருப்பதாக மத்திய அரசு ஆராய்ந்திருக்கிறது. மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இதிலே சம்பந்தம் உண்டா? மாநில அரசு மத்திய அரசிடம் இதற்காக ஏதாவது உதவி கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய புவியியல் கழகம் மத்திய அரசுக்குச் சொந்தமானது. அதேபோல் தமிழ்நாடு புவியியல் கழகம் தமிழக அரசின் வரம்பிற்கு உட்பட்டது. புவியியல் ஆய்வுகளை மேற்கொள்கின்றபோது கனிமப் பொருள்களைப் பொறுத்தவரைக்கும் மாநில அரசு மேற்கொள்கிறது. பெட்ரோலைப் பொறுத்த வரைக்கும் தனி இலாகா மத்திய, அரசினுடைய நிறுவனம் அதுகுறித்து ஆய்வு செய்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிக்கை அளித்தல்.

கன்னியாகுமரி மாவட்ட சம்பவங்கள் பற்றி முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் விதி 106-ன் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்கள்.

[முற்பகல் 10.00]

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே மண்டைக்காடு பகுதியில் இந்துக்கள், கிறிஸ்துவர்கள் ஆகியவர்களுக்கிடையே வாழ்க்கை பாதிக்கக்கூடிய அளவிற்கு அங்கே நிகழ்ந்த கலவரங்கள் அதன் பின்னர் நடந்த துப்பாக்கிச் சூடு, அதையடுத்து ஏற்பட்ட பதட்டமான சூழ்நிலை குறித்து நேரிலே கண்டறிவதற்காக 14-3-1982 அன்று நாகர்கோவில் சென்றேன்.